**04.01.23** **C.C. No. 78/14** பெயர். திரு . **விஜய்பாஸ்கர்**

**PW** 2

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

**<u>குறுக்கு விசாரணை:-</u>**

நான் இவ்வழக்கில் சம்பவ இடம் குறித்து பார்வை மகஜரோ அல்லது மாதிரி வரைப்படம் தயாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் தயாரிக்கப்பட்ட ஆவணங்களில் என்ன பை என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் மஞ்சள் நிற துணிப்பை என்று மகஜரில் குறிப்பிட்டுள்ளார். சார்பு ஆய்வாளர் மதியழகன் என்னிடம் கொடுத்த புகாரில் சாட்சி கையொப்பம் போட்டதாக குறிப்பு உள்ளதா என்றால் இல்லை. டிவிஎஸ் சூப்பர் எக்சல் ஆவணங்கள் உரிமையாளர் வாகனங்கள் எதுவும் கைப்பற்றவில்லை. நான் இந்த வழக்கில் சம்பவ சமயத்தில் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை. இந்த வழக்கில் எதிரியை நான்தான் கைது செய்தேன். இந்த வழக்கில் எதிரிகளை கைது செய்வதற்காக கைது அறிவிப்பு சார்பு ஆய்வாளரால் சார்பு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பொருட்கள் 13.10.2014ம் தேதி இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றால் அன்றைய தினம் நீதித்துறை நடுவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவர் சான்றுபொருட்கள் பெற்றுக்கொண்டதற்கு ஏதாவது குறிப்பு உள்ளதா என்றால் அவ்வாறு குறிப்பு இல்லை. ஆனால் கையொப்பம் மட்டும் செய்துள்ளார். நான் சொன்ன நேரத்தில், சார்பு ஆய்வாளரர் சம்ப வஇடத்திற்கு செல்லவில்லை என்றும் அங்கு எதிரிகளை பார்க்கவில்லை என்றும், கஞ்சா எதுவும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. அவர் சொன்ன நேரத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றும், அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் நீதித்துறை நடுவரிடம் சான்றுப்பொருட்கள் ஒப்படைத்தாக சொல்வது பொய் என்றும் அவ்வாறு ஒப்படைத்திருந்தால் நீதித்துறை நடுவர் சான்றொப்பம் செய்திருப்பார் என்றும் அவ்வாறு செய்யாததால் தான் நீதித்துறை நடுவர் மேலோப்பம் செய்யவில்லை என்றும், தற்பொது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளிடமிருந்து சொன்ன நேரத்தில் பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படாததால் பின்னிட்டு வழக்கு தோதிற்காக காலதாமதமாக பொருட்கள் நீதிமன்றத்தில்

ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் போதை பொருள் சட்ட விதிகளை முறையாக கடைபிடிக்காமல் முறையாக புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சளரியல்ல.

Taken down by me in open court
read over to the witnesses and
admitted by him / her to be correct.

Addl. District Judge/ Presiding Officer,
Spl. Court for EC/NDPS Act case, Pudukkottai.

**DEPOSITION OF WITNESSES**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI**

**C.C. No: 92/2021**

**Deposition of Witnesses for PW10**

| | | | |
|---|---|---|---|
| Name | : | ஜெயக்குமார் | Caste: |
| Father's Name | : | | Calling: |
| Village | : | | Religion: |
| Taluk | : | | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **04.01.2023.**

முதல் விசாரணை

நான் தற்போது திருச்சி மாவட்டம் மத்திய நுண்ணறிவு பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26.07.2021ம் தேதி காந்தி மார்க்கெட் காவல் நிலையத்தில் தலைமை காவலராக இருந்தபோது காந்தி மார்க்கெட் காவல் ஆய்வாளர் அவர்கள் குஎண்..490/2021 என்ற வழக்கில் அனைவரின் வாக்குமூலங்கள் பதிவு செய்ய அவர் வாசிக்க நான் நிலைய மடிக்கணினியில் தட்டச்சு செய்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் கு.வி:-</u>**

நான் மடிக்கணினியில் தட்டச்சு செய்ததாக சொல்லும் வாக்குமூலங்கள் பதிவு செய்த மடிக்கணினி தொடர்பான மென்பொருள் மற்றும் விபரங்கள் அடங்கிய தொடர்பாக ஆய்வாளரிடம் சான்றிதழ் எதுவும் வழங்கவில்லை. ஆய்வாளர் விசாரணையில், தட்டச்சு செய்தது தொடர்பாக மட்டுமே குறிப்பிட:டுள்ளேன். அது யார் மூலம பிரிண்ட் அவுட் எடுக்கப்பட்டது என்ற விவரம் சொல்லவில்லை என்றால் சரிதான். ஆனால் நான் தான் பிரிண்ட் அவுட் எடுத்தேன். அது எந்த விதமான மெஷினில் பிரிண்ட் அவுட் எடுக்கப்பட்டது என்ற விவரம் ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சாதான். ஆனால் காவல் நிலையத்தில் இருந்த Canon Machine- ல் தான் பிரிண்ட் அவுட் எடுத்தேன். 26.07.2021ம் தேதியிலேயே தான் நான் தட்டச்சு

செய்த அனைத்து வாக்குமூலங்களும் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் சொன்ன மாதிரி சொன்ன தேதியில், சொன்ன விதத்தில் வாக்குமூலங்கள் பதிவு செய்யவில்லை என்றும் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அது என் மூலமாக தட்டச்சு செய்யவில்லை என்றால் சரியல்ல.

Taken down by me in open court
read over to the witnesses and
admitted by him / her to be correct.

Addl. District Judge/ Presiding Officer,
Spl. Court for EC/NDPS Act case, Pudukkottai.

**DEPOSITION OF WITNESSES**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI**

**C.C. No: 22/2016**

**Deposition of Witnesses for PW2**

| | | | |
|---|---|---|---|
| Name | : | ராஜாங்கம் | Caste: |
| Father's Name | : | | Calling: |
| Village | : | | Religion: |
| Taluk | : | | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **04.01.2023.**

முதல் விசாரணை

நான் தற்போது கீரனூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2015ம் வருடம் ராமநாதபுரம் போதை பொருள் நுண்ணறிவு பிரிவில் தலைமை காவலராக பணியாற்றியபோது, 16.10.2015ம் தேதி 19.15 மணிக்கு ராமநாதபுரம் போதை பொருள் நுண்ணறிவு பிரிவு காவல் ஆய்வாளர் அவர்கள் பணியில் இருந்தபோது ராமநாதபுரம் Q பிரிவு ஆய்வாளர் கென்னடி அவர்களுக்கு தகவலாளி சொன்ன தகவலின்பேரில் NIB CID ஆய்வாளர் அவர்களுடன் நானும் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.மாரிமுத்து தலைமை காவலர்கள் திரு.குமரேசன், Q பிரிவு ஆய்வாளர் திரு.கென்னடி உதவி ஆய்வாளர் கணேசமூர்த்தி, பெரியசாமி தலைமை காவலர்கள் தில்லை ராஜன், இளங்கோவன், செந்தில்குமார், முதல்நிலை காவலர் சுந்தர மூர்த்தி, ஆகிய போலீஸ் பார்ட்டி வருவாய் துறையினரான எஸ்.பி.பட்டினம் விஏஓ திரு.சிதம்பரம், அவரது உதவியாளர் திரு.காளீஸ்வரன் ஆகியோர்களுடன் 19.45 மணிக்கு புறப்பட்டு எஸ்.பி.பட்டினத்திலிருந்து மீமிசல் செல்லும் கிழக்கு கடற்கரை சாலையிலுள்ள நாகூர் கனி. லேட் அவர்களின் Guest House முன்புறம் உள்ள தென்னதோப்பில் 22.00 மணிக்கு சென்று சேர்ந்தோம். தகவலாளி அடையாளம் காட்டிய ராமேஸ்வரம் பள்ளி வாசல் தெருவை சேர்ந்த முகமது அப்துல் காதர் மகன் அல்லா பிச்சை மற்றும் எஸ்.பி.பட்டினத்தை சேர்ந்த நாகூர் கனி மகன் கலந்தர் அலி ஆகியோர்கள் சோதனை செய்ய 22.30 மணிக்கு சோதனை சம்மத கடிதம் தயார் செய்து தாங்களே போதை பொருள் சம்பந்தமாக சோதனை செய்ய வேண்டும் என சொன்னதன்பேரில் தாங்கள் விரும்பினால் அருகிலுள்ள நீதித்துறை நடுவரிடமோ, அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரியிடமோ அழைத்து செல்கிறோம் என்று கூறியதற்கு எங்களை யாரிடமும் அழைத்து செல்ல வேண்டாம் தாங்களே சோதனை செய்யலாம் என சொன்னதன் பேரில் சாட்சிகள் விஏஓ திரு.சிதம்பரம், உதவியாளர் திரு.காளீஸ்வரன், Q பிரிவு ஆய்வாளர் திரு.கென்னடி, உதவி ஆய்வாளர் திரு. பெரியசாமி அவர்கள் முன்னிலையில் சோதனை

செய்தபோது 3 சாக்குமூட்டையில் அரசால் தடை செய்யப்பட்ட போதை பொருளான கஞ்சா காணப்பட்டது. அதை P1, P2, P3 என குறியீடு செய்து நாங்கள் கொண்டு சென்ற திராசில் எடை போட்டு பார்த்தபோது P1 சாக்கு மூட்டையில் 45 கிலோ கஞ்சாவும், P2 சாக்குமூட்டையில் 45 கஞ்சாவும், P3 சாக்கு மூட்டையில் 44 கிலோ கஞ்சாவும் ஆக மொத்தம் 134 கிலோ கஞ்சாவும் இருந்தது. அதன் சந்தை மதிப்பு ரூ.13,40,000/- ஆகும். மேற்படி மூட்டையிலிருந்து தலா 50 கிராம் வீதம் பகுப்பாய்விற்கு எடுத்து P1 லிருந்து எடுக்கப்பட்டதை S1 எனவும், P2 லிருந்து எடுக்கப்பட்டதை S2 எனவும், P3 லிருந்து எடுக்கப்பட்டதை S3 எனவும் குறியீடு செய்தோம். மீதமிருந்ததை அதே சாக்கில் கட்டி அரக்கால் NIB -CID சீல் வைத்தும் பகுப்பாய்வுக்கு எடுத்த கஞ்சாவை காக்கி கவரில் மடித்து நூலால் சுற்றி வழக்கின் விவரம் அடங்கிய சிலிப் ஒட்டி அரக்கால் NIB -CID சீல் வைத்தும் A1 ஆஜர்ப்படுத்திய 2 Nokia செல்போன் தலா 2 சிம்கார்டுகள், A2 ஆஜர்படுத்திய 1 Nokia, 1 Sony செல்போன் ஆக 2 செல்போன்கள், பணம் ரூ.6,300/-ஆகியவற்றை ஆஜர் செய்ததை சாட்சிகளான விஏஓ திரு.சிதம்பரம், உதவியாளர் திரு.காளீஸ்வரன், Q பிரிவு ஆய்வாளர் திரு.கென்னடி, உதவி ஆய்வாளர் திரு. பெரியசாமி ஆகியோர்கள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினோம். A1 தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை 00.40 மணிக்கு பதிவு செய்தோம். A2 தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை 01.30 மணிக்கு பதிவு செய்தோம். A2 எதிரி தற்போது நீதிமன்றத்தில் முன்னிலையாகியுள்ள ஆஜர் எதிரி தான். மேலும் 3.00 மணிக்கு NIB -CID காவல் ஆய்வாளர் அவர்கள் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்தார்கள். அதற்கு நானும், சிறப்பு உதவி ஆய்வாளர் மாரிமுத்து அவர்கள் கையெழுத்து செய்தோம். அந்த அ.த.சா.ஆ.1 பார்வை மகஜரில் உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது. பின்னர் எதிரிகள் மற்றும் பொருள்களுடன் நிலையம் வந்து காவல் ஆய்வாளர் அவர்கள் வழக்கு பதிவு செய்ய அவருக்கு உதவியாக இருந்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

தகவல் கிடைத்தபோது காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளர், சிறப்பு உதவி ஆய்வாளர் மாரிமுத்து, தலைமை காவலர் குமரேசன், நான் ஆகியோர் இருந்தோம். எல்லா காவல் துறையினரும், Q பிரிவு காவலர்களும் எஸ்.பி.பட்டினத்தில் சேர்ந்தோம். ஆய்வாளர் விசாரணையில், எந்த இடத்தில் சந்தித்தோம் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என்னுடைய வாக்குமூலத்தில் ஆய்வாளர் திரு. கென்னடி அவர்களின் ரகசிய தகவலாளி சொன்ன தகவலின் பேரில் என்ற வாசகம் இடம்பெற்றுள்ளது என்றால் சரிதான். எங்களுடைய காவல் நிலையத்திலிருந்து எஸ்.பி.பட்டினம் சுமார் 70 கிமீ தூரம் இருக்கும். சம்பவ இடம் செல்வதற்கு சுமாராக 1 மணிநேரம் ஆகும். எஸ்.பி.பட்டினம் விஏஓ மற்றும் எல்லோரும் சேர்ந்து செல்ல சுமார் 1 மணி நேரம் ஆக வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. என்னுடைய வாக்குமூலத்தில் ரைடு பார்ட்டி சென்ற நபர்களும் காவலர்களும் விஏஓ, மற்றும் உதவியாளர் ஆகியோர் சகிதம்

19.45 மணிக்கு புறப்பட்டு சென்ற வாசகம் உள்ளது என்றால் சரிதான். அப்படி செல்வதற்கு வாய்ப்பில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. எங்களுடன் தகவலாளி வந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். தகவலாளி எங்களுடன் வராமல் சம்பவ இடத்தை எங்களால் கண்டுக்கொள்ள இயலாது என்றால் சரியல்ல. தகவலாளி எங்களுடன் வந்தார். அவ்வாறு தகவலாளி வந்ததாக ஆய்வாளர் விசாரணையில் என்னுடைய வாக்குமூலத்தில் காணப்படவில்லை என்றால் சரிதான். என்னுடைய வாக்குமூலத்தில் தகவலாளி வராதபட்சத்தில் சம்பவ இடத்தையும், எதிரிகளை அடையாளம் காட்ட வாயப்பில்லை அதால் என்னுடைய வாக்குமூலத்தில 22.00 மணிக்கு சேர்ந்து தகவலாளி அடையாளம் காட்டிய என்ற வாசகம் இடம் பெற்றுள்ளது என்றால் சரிதான். அரை மணிநேரத்தில் சம்பவ இடம் செல்லமுடியாது என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடம் தனியாரக்கு சொந்தமான Guest House என்றால் சரிதான். சுற்றியிலும் சுற்றுச்சுவர் உள்ளது. சம்பவ நடந்ததாக சொல்லப்படும் நேரம் இரவு நேரம் என்றால் சரிதான். சம்பவ நேரம் இரவு நேரம் என்பதால் தனியாருக்கு சொந்தமனா கட்டிடத்திற்கு ள் நுழைவதற்கு நீதித்துறை நடுவரிடம் Search Warrant வாங்குவதற்கு என் காவல் ஆய்வாளர் ஏற்பாடு செய்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சோதனை சம்மத கடிதத்தில் எதிரிகளிடம் அவர்களுக்கு உண்டான உரிமையை எடுத்துச்சொல்லும்போது நீதித்துறை நடுவரிடமோ அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரியிடம் உங்களைசோதனை செய்வதற்கு உரிமை உண்டு என்று மட்டும் கேட்கப்பட்டுள்ளது என்றும் வருவாய் துறையினரால் சோதனை செய்யலாமா என்று கேட்கவில்லை என்றால் சரிதான். கேட்காத கேள்விக்கு யாரும் பதில் சொல்ல மாட்டார்கள் என்றால் சரிதான். வழக்கிற்காக வருவாய் துறையினரால் சோதனை செய்யலாமா என்று நாங்களே எழுதிக்கொண்டோம் என்றால் சரியல்ல. என்னுடைய வாக்குமூலத்தில் கஞ்சா எந்த இடத்தில் இருந்தது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. 3 மூட்டைகளை எதிரிகள் கையில் வைத்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. எந்த இடத்தில் கஞ்சா இருந்ததாக வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். நாங்கள் படிகற் திராசு கொண்டு சென்றோம். 44 கிலோ கஞ்சாவை ஒரே தடவையில் எடை போட முடியாது என்றால் சரிதான். பகுப்பாய்விற்கு மட்டுமே மாதிரி கஞ்சா எடுக்கப்பட்டது. சம்பவ இடத்திலிருந்து காவல் நிலையம் சென்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பின் தான் குற்ற எண் தெரியவரும் அதற்கு முன் தெரிய வாய்ப்பில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் தயாரிக்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் பார்வை மகஜரில் குற்ற எண் மற்றும் சட்ட பிரிவுகள் குறிப்பிடப்பட்டுள்ளன என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலமும் பார்வை மகஜரும் காவல் நிலையத்தில் தயார் செய்தததால் தான் குற்ற எண் மற்றும் சட்டபிரிவுகள் குறிப்பிடப்பட்டுள்ளன என்றால் சரியல்ல. மடிகணினியில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் பதிவு செய்த ஒப்புதல் வாக்குமூலத்தின் நகல் எங்கே இருந்து எடுக்கப்பட்டது என்றால் சம்பவஇடத்தில் எடுக்கப்பட்டது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் பிரிண்டர் மூலம் நகல் எடுக்கப்பட்டது. பிரிண்டர் மூலம் நகல் எடுக்கப்பட்டதாக என்னுடைய வாக்குமூலத்திலும்

குறிப்பிடப்படவில்லை. இரவு 1,30 மணி அளவில் பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம் அச்சிடப்பட்டும் 3 மணியளவில் தயாரிக்கப்பட்ட பார்வை மகஜர் கையால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பார்வை மகஜர் கையால் எழுதப்பட்டது பற்றி ஆய்வாளரிடம் தான் கேட்கவேண்டும். பார்வை மகஜரில் நேரம் 3 மணி என குறிப்பிடப்பட்டுள்ளது வொயிடனர் போட்டு திருத்தி எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் சான்று பொருள்களின் மீது ஒட்டிய விவரங்கள் அடங்கிய சிலிப்பில் வழக்கின் குற்ற எண் பொருளின் விவரம், சாட்சிகளின் கையொப்பம் , ஆய்வாளரின் கையொப்பம் ஆகியன குறிப்பிடப்பட்டிருந்தது. வி.ஏ.ஓ சிதம்பரம், உதவியாளர் காலீஸ்வரன், க்யு பிரிவு ஆய்வாளர் கென்னடி, க்யு பிரிவு உதவி ஆய்வாளர் பெரியசாமி ஆகியோரின் கையொப்பம் குறிப்பிடப்பட்டிருந்தது. என்னுடைய வாக்குமூலத்தில் மேற்கண்ட நபர் முன்னிலையில் 22.30 மணிக்கு அத்தாட்சி கைப்பற்றப்பட்டது என குறிப்பிடப்பட்டது என்றால் சரிதான். **சம்பவ இடத்தில் தயாரிக்கப்பட்ட ஆவணங்களில் பார்வை மகஜர் தவிர மற்ற எந்த ஆவணங்களிலும் நான் கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்பதால் தான் நான் எந்த ஆவணத்திலும் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரியல்ல. பார்வை மகஜர் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. Q பிரிவினர் எதிரிகளை பிடித்து கொடுத்து பொய் வழக்கு பதிவு செய்ய கேட்டுக்கொண்டதன்பேரில் எதிரிகளின் மீது பொய் வழக்கு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.**

Taken down by me in open court
read over to the witnesses and
admitted by him / her to be correct.

Addl. District Judge/ Presiding Officer,
Spl. Court for EC/NDPS Act case, Pudukkottai.

**DEPOSITION OF WITNESSES**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT,**

**PUDUKKOTTAI**

**C.C. No: 49/2018**

**Deposition of Witnesses for PW1**

| | | | |
|---|---|---|---|
| Name | : | மாடசாமி | Caste: |
| Father's Name | : | | Calling: |
| Village | : | | Religion: |
| Taluk | : | | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **04.01.2023.**

முதல் விசாரணை

நான் தற்போது சிவகாசி கிழக்கு காவல் நிலையத்தில் பயிற்சி சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.12.2017ம் தேதி திருத்தங்கல் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது திருத்தங்கள் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் காளிமுத்து மற்றும் தலைமை காவலர் சுப்புராம், காவலர் மனோகரன் ஆகியோர்கள் பார்ட்டி சகிதமாக சிவகாசி உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களின் அனுமதியுடன் திருத்தங்கள் சரக மது விலக்கு சம்பந்தமாக ரோந்து சென்றபோது அதிவீரன்பட்டி காளியம்மன்கோவிலில் பின்புறமுள்ள முள்வேலி செடியின் அருகில் அதிவீரன்பட்டி மூக்கானிதேவர் மகன் ராசு என்பவர் திருத்தங்கள் காவல் நிலையத்தில் பல கஞ்சா வழக்குகளில் சம்பந்தப்பட்டவரும் தகவலாளி அடையாளம் காட்டிய நபரை நாங்கள் தங்களிடம் போதை பொருள் இருப்பதாக தகவல் வந்துள்ளது என்றும் அவரை அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரியிடம் சோதனை செய்யலாமா அல்லது நடுவர் நீதிபதி மூலம் சோதனை செய்யலாமா என்று கேட்டதற்கு வேண்டாம் தாங்களே சோதனை செய்யலாம் என்று கூறியதன்பேரில் அவர் கையில் வைத்திருந்த வெள்ளை நிற பையை தங்கள் முன் ஆஜர் செய்ததை சோதனை செய்து பார்த்தபோது இலை, தழையுடன் கூடிய கஞ்சா எனும் போதை பொருள் இருந்தது. அதை நாங்கள் கொண்டு சென்ற திராசின் எடைபோட்டு பார்த்தபோது 1.100 கிராம் கஞ்சா எடை இருந்தது என்றும், அதில் தலா 50 கிராம் கஞ்சாவை மாதிரிக்காகவும் பகுப்பாய்விற்காகவும் எடுத்து மீதமுள்ள 1 கிலோ கஞ்சாவை தனியாக காக்கி கவரில் கட்டி எஸ்.ஹெச்.ஓ சீல் வைத்தும் எதிரியிடம் கையெழுத்து பெற்று, சாட்சிகளாக தனி நபர் யாரும் கையெழுத்து செய்ய முன்வராததால் போலீஸ் பார்ரட்டியாகிய நானும், சுப்புராமன், மனோகரன் ஆகியோர்கள் கையெழுத்து செய்தோம். பின்பு சொத்துக்கள் மற்றும் எதிரியுடன் நிலையம்

கொண்டு வந்து வழக்கு பதிவு செய்ய நான் உதவியாக இருந்தேன். நானும், சுப்புராமன், மனோகரன் ஆகியோர்கள் கையெழுத்து செய்த அத்தாட்சி அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

நாங்கள் தகவல் கிடைத்தவுடன் இருசக்கர வாகனத்தில் சென்றோம். சம்பவ இடத்திற்கு விஏஓ, தலையாரி யாரையும் அழைத்து செல்லவில்லை. அத்தாட்சியை சார்பு ஆய்வாளர் எழுதினார். நானும், சுப்புராமன், மனோகரன் ஆகியோர்கள் எழுதவில்லை. மகஜரில் எதிரியிடம் கையெழுத்து வாங்கினோம். வெள்ளை நிற பை நாங்கள் கைப்பற்றினோமா என்று ஞாபகம் இல்லை. தனி நபர் அழைத்த நபர்களின் பெயர், விலாசம் கொடுத்தோமா என்றும், அவர்கள் மீது சட்டநடிவக்கை எடுத்தோமா என்றால் ஞாபகம் இல்லை. மகஜர் 12.30 மணிக்கு எழுதப்பட்டது. சார்பு ஆய்வாளர் காளிமுத்துவிற்கு வந்த ரகசிய தகவல் பற்றி எனக்கு நேரிடையாக தெரியாது. நாங்கள் கொண்டு சென்றதது கைப்பிடி திராசு. நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் சார்பு ஆ ய்வாளராக தகவல் வந்தது பொய் என்றும், எதரியிடமிருந்து சோதனை சம்மத கடிதம் வாங்கியது பொய் என்றும், எதிரியிடமிருந்து கஞ்சா வாங்கியது பொய் என்றும், காவல் நிலையத்தில் வைத்து மகஜர் தயாரிக்கப்பட்டது என்றும் உயர் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court
read over to the witnesses and
admitted by him / her to be correct.

Addl. District Judge/ Presiding Officer,
Spl. Court for EC/NDPS Act case, Pudukkottai.

**DEPOSITION OF WITNESSES**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI**

**C.C. No: 1/2021**

**Deposition of Witnesses for PW3**

| | | | |
|---|---|---|---|
| Name | : | பீட்டர் அலங்கார தம்பூராஜ் | Caste: |
| Father's Name | : | | Calling: |
| Village | : | | Religion: |
| Taluk | : | | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **04.01.2023.**

முதல் விசாரணை

நான் தற்போது சிவகங்கை மாவட்டம் எஸ்.வி. மங்கலம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 08.07.2020ம் தேதி பழையனூர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அதிகாலை 4 மணிக்கு கிடைத்த உத்தரவின் பேரில் பூவந்தி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் மாரிமுத்து அவரிடம் அறிக்கை செய்துள்ளேன். சுமார் 5 மணியளவில் மேலராங்கியம் கம்மாய் தென்பகுதியில் மேற்படி சார்பு ஆய்வாளர் மாரிமுத்து தலைமையில் பி டீம் காவலர்கள் ராஜா, பழையனூர் காவல் நிலைய காவலர் சோலைமுத்து, மானாமதுரை குற்றப்பிரிவு ராஜா, சிப்கார்டு காவல் நிலைய காவலர் முத்துராமலிங்கம் மற்றும் கணேசன், திருப்பாச்சிசேத்தி காவல் நிலைய காவலர் தர்மேஷ் ஆகியோருடன் நானும், திருப்புவனம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் பாலமுருகன் அவருடைய தலைமையில் ஏ டீம், திருப்பாச்சி சார்பு ஆய்வாளர் திரு.ராஜ்குமார் அவருடைய தலைமையில் சி டீம் ஆகிய மூன்று குழுக்களாக பிரிந்து மேற்படி திருப்புவனம் காவல் நிலைய சரகம் ஐயன்னார் கோவில் காட்டுப்பகுதியில் மேற்படி பூவந்தி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அறிவுறுத்தலின்பேரில் சந்தேக நபர்கள் நடமாடுவதை கண்காணித்து சென்றபோது ஒருவர் மட்டும் சத்தம் போட்டுக்கொண்டு போலீஸ் வருது என்று சொல்லிக்கொண்டு ஓடினார். நாங்கள் அங்கிருந்த மீதமிருந்தவர்களை சுற்றிவழைத்து பிடித்த நவீன்குமார் என்ற நவீன்நாகராஜ், குட்டை முருகன், அஜய்தேவன், ராஜேஷ்கண்ணன், ரவி என்ற முகிலன் காளீஸ்வரன் ஆகிய 7 நபர்களை பிடித்து விசாரணை செய்தோம். அந்த 7 நபர்களும் தற்போது நீதிமன்றத்ததில் முன்னிலையாகியுள்ள ஆஜர் எதிரிகள் தான். அவர்களை விசாரித்தபோது 7 வாள், 3 வீச்சு அரிவாள், 1 குத்து கத்தி ஆகிய ஆயுதங்களுடன் ஒரு பெரிய கஞ்சா பண்டல் இருந்தது. சம்பவ இடத்தில் 8 இருசக்கர வாகனங்கள் இருந்தது. மேற்படி திருப்புவனம் சார்பு ஆய்வாளர் பாலமுருகன் அத்தாட்சி தயார் செய்து, திருப்புவனம் காவல்

நிலைய காவலர்கள் விமல்ராஜ், அருள்மொழி அவர்கள் முன்னிலையில் அத்தாட்சியில் 7 வாள், 3 வீச்சு அரிவாள், 1 குத்து கத்தி ஆகிய ஆயுதங்களுடன் ஒரு பெரிய கஞ்சா பண்டல்கள் ஆகியவற்றை கைப்பற்றினார். நவீன்நாகராஜை விசாரித்தபோது தப்பி சென்ற கார்த்தி, வேல்முருகன், நாகப்பன், தமிழ்செல்வன் என்ற அஜித், விஜய், இளங்கோவன் ஆகியோர் ஓடி போனதாக சொன்னார்கள். (மேற்படி சங்கதிகள் காவலரிடம் கொடுத்த வாக்குமூலம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்பதால் எதிரிகள் தரப்பில் ஆட்சேபனை செய்யப்படுகிறது) மேற்படி அனைவரையும் திருப்புவனம் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றோம். திருப்புவனம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் பாலமுருகன் புகார் பதிவு செய்தார். மேற்படிஅவர் புகார் கொடுக்க நாங்கள் உதவியாக இருந்தோம். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>அனைத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

பழையனூர் என்பது தனி காவல் நிலையம் என்றால் சரிதான். அதன் இன்ஸ்பெக்டர் திருமதி.சரிதா பாலு. பழையனூர் காவல் நிலையம் பூவந்தி காவல் ஆய்வாளர் பொறுப்பில் இருந்தது. அயல் பணி செல்ல வேண்டும் என்றால் ஆய்வாளருக்கு தெரியப்படுத்தவேண்டும் என்றால் காவல் துறை கண்காணிப்பாளர் உயர் அதிகாரி சொல்லும்போது ஆய்வாளரிடம் தகவல் கூறவில்லை. அதனால் நான் பணி செய்த விவரங்கள் எதுவும் என் ஆய்வாளருக்கு தெரியாது. என்னுடைய காவல் நிலையத்தில் என்னென்ன டைரி பின்பற்ற வேண்டும்என்று தெரியும். காவல் நிலையத்திற்கு உயர் அதிகாரி கொடுக்க வேண்டிய தகவலானது வாக்கி டாக்கி மற்றும் தொலைபேசி மூலமாக தெரிவிக்க் வேண்டும். அந்த தகவலானது எங்கள் அலுவலகத்தில் உள்ள போன் புக்கில் பதிவு செய்யப்படும். எனக்கு தனிப்பட்ட முறையில் ஆய்வாளர் பணி நியமனம் செய்தால் அதை எஎன்னுடைய அலுவலக பொதுநாட்குறிப்பில் குறித்து செல்ல வேண்டும். அந்த பொது நாட்குறிப்பில் எத்தனை மணிக்கு தகவல் வந்தது என்றும், எத்தனை மணிக்கு அலுவலகத்திலிருந்து புறப்பட்டேன் என்று குறிக்கப்படவேண்டும். அதுபோல் எனக்கு ரோஸ்டர் பதிவேடு உள்ளது. அதிலும் அன்றாட பணிகள் குறித்து குறிக்க வேண்டும். அயல் பணி முடித்து வரும்போது என்னுடைய உயர் அதிகாரிக்கு தனி அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். தனி அறிக்கையில் நான் எத்தனை மணிக்கு அலுவலகத்திற்கு வந்தோம் என்னென்ன பணி செய்தோம் என்று குறித்து சமர்ப்பிக்க வேண்டும். இந்த வழக்கு சம்பந்தமாக திருப்புவனம் காவல் ஆய்வாளர் 08.07.2020மம் தேதி சுமார் 8 மணியளவில் விசாரித்தார். என்னை விசாரிக்கும்போது ரோஸ்டர் பதிவேடு மற்றும் அலுவலக பொது நாட்குறிப்பு, தனி அறிக்கை ஆகியவை குறித்து ஆய்வாளர் கேட்டாரா என்றால் இல்லை. அவைகளை பார்த்தால் 08.07.2020ம் தேதி என்னென்ன பணிகள் செய்தேன் என்று தெரியவரும் என்றால் சரிதான். பழையனூா காவல் நிலையத்திற்கும், திருப்புவனம் காவல் நிலையத்திற்கும் சுமார் 10 கிமீ தூரம் இருக்கும். ஆவாரங்காடு காவல் நிலையம் திருப்பாச்சிசேத்தி காவல் நிலையத்திற்கு உட்பட்டது. என்னை ஆய்வாளர் விசாரிக்கும்போது எனக்கு தகவல் கொடுத்த மேல் அதிகாரியின் பதவி அவர் பெயர் ஆகிய விவரங்களை கேட்டார்களா என்றால் இல்லை. நான் சொல்லவில்லை. இந்த குழு அமைக்கப்பட்ட விவரம் எப்போது தெரியும் என்றால் நான் பூவந்தி

காவல் நிலைய சார்பு ஆய்வாளரை சந்தித்தபோது தான் சொன்னார். அவ்வாறு சந்தித்து மேலராங்கியம் கம்மாய்க்குள் வைத்து தான். மேலராங்கியம் கம்மாய்வில் அவரை பார்க்கும்போது 5 மணியிலிருந்து 5.15 மணிக்குள் இருக்கும். முதன்முதலில் மாரிமுத்து அவர்களை சந்தித்தது மேலராங்கியம் கம்மாய்யில் வைத்து தான் சந்தித்தோம். அங்கு அவரை முதன்முதலில் சந்தித்தபோது தான் எதற்காக செல்கிறோம் என்ற விவரத்தை சொன்னார். பி டீம் மட்டும் தான் மேலராங்கியம் கம்மாய்யிலிருந்து மாங்குடி கம்மாய் நோக்கி சென்றோம். அதுவரையில் மற்ற குழுவினர் எங்கு சென்றார்கள் என்னவானார்கள் என்று எனக்கு தெரியாது. அதன்பின்பு திருப்புவனத்தில் காவல் நிலையத்திற்கு வந்தபின்பு தான் அங்கு வைத்து எல்லோரும் சந்தித்தோம். காவல் நிலையத்தில் 8 மணிக்கு தான் பார்த்தேன். எனக்கு கம்மாய் என்றால் என்ன ஊரணி என்றால் என்ன வித்தியாசம் தெரியும். வாயக்காடு என்றால் என்ன புஞ்சை என்றால் என்ன வித்தியாசம் தெரியும். மாங்குடி ஐயனார் கோவிலுக்கு சம்பவத்திற்கு முன்பு செல்லவில்லை. என் குழுவில் உள்ள பழையனூர் காவல் நிலைய காவலருக்கு சோலைமுத்து அந்த இடம் தெரியும். அந்த கோவில் ஒட்டி ஒரு தார்ரோடு உள்ளது என்றால் இல்லை. கோவிலுக்கு அருகில் ஒரு மடை உள்ளது. அது மேற்கு பக்கம் உள்ளது. அந்த மடை எதற்காக பயன்படுத்துவார்கள் என்றால் தண்ணீர் பாய்ச்சுவதற்காக என்று தெரியும். அந்த மடையானது கம்மாயிலிருந்து வயலுக்குள் தண்ணீர் பாய்ச்சுவதற்கு அமைக்கப்பட்டுள்ளது. ஊரணி என்பது நான்குபுறமும் கரைகளால் சூழப்பட்டுள்ளது. அது தண்ணீர் எப்போது நிரந்திரமாக இருக்கும். வெளியேறாது. போலீசார் என்னை விசாரிக்கும்போது நவீன் நாகராஜ் யாரிடம் வாக்குமூலம் கொடுத்தாரா என்று குறிப்பிட்டு கேட்டாரா என்றால் கேட்டார். நான் சொன்னேன். நான் அந்த குழுவில் என்ன பணிகள் செய்தேன் என்று ஆய்வாளர் கேட்டாரா என்றால் கேட்டார். ஆய்வாளர் விசாரணையில், ஒரு நபர் போலீஸ் வருகிறது என்று சத்தம் போட்டு ஓடினார் என்று சொல்லியுள்ளேன். ஆய்வாளர் விசாரணையில், 5 மணிக்கு மேலராங்கியம் கம்மாய் தென்பகுதிக்கு சென்றேன் என்று சொன்னேனா என்றால் சொன்னேன். என்னுடைய அலுவலகத்திலிருந்து மற்றவர்கள் காவலர்களுக்கு யார் தகவல் கொடுத்தார்கள் என்ற விவரம் தெரியாது. என்னுடைய காவலர் சோலை முத்து அவர்களுக்கு எங்கு செல்கிறோம் என்ற விவரத்தை நான் தான் சொன்னேன். திருப்புவனம் காவல் நிலையத்தில் ரகசிய தகவல் எதுவும் பதிவாகியிருந்ததா என்றால் அது பற்றி தெரியாது. நானும் அது குறித்து கேட்டுக்கொள்ளவில்லை. அதனால் ஆய்வார் விசாரணையில், திருப்புவனம் காவல் நிலையத்திற்கு வந்த ரகசிய தகவல் குறித்த விவரங்கள் நான் சொல்லிக்கொள்ளவில்லை.

Taken down by me in open court
read over to the witnesses and
admitted by him / her to be correct.

Addl. District Judge/ Presiding Officer,
Spl. Court for EC/NDPS Act case, Pudukkottai.